மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 341/2015 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | சேகர் (எ) ஆறுமுகம் | நாள் | 12.12.2022 |
| தகப்பனார் பெயர் | அம்மாசி | | |

**1 முதல் 6, 10 முதல் 17 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

6) காவேரி (எ) மந்திக்கு அம்மாசி, சித்தன், சின்னபையன் ஆகியோர்கள் மகன்கள் என்றால், சரிதான். இவ்வழக்கில் உள்ள வாதிகளும், பிரதிவாதிகளும் காவேரி (எ) மந்தியின் வாரிசுகள் என்றால், சரிதான்.

7) காவேரி (எ) மந்தி 27.07.1955ம் தேதியில் சொத்துக்களை கிரயத்திற்கு வாங்கியுள்ளார் என்றால், சரிதான். 1 முதல் 14, 15 முதல் 17 வரையிலான பிரதிவாதிகள் அனைவரும் ஒரு பழனி என்பவரின் வாரிசுகள் என்றால், சரிதான். மேற்படி காவேரி (எ) மந்தியின் மகன்களில் ஒருவரான சித்தன் என்பவரத மகன்தான் மேற்படி பழனி என்றால், சரிதான்.

8) இவ்வழக்கை நாங்கள் தாக்கல் செய்வதற்கு முன்பு மேற்படி பழனி வகையறா இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை எங்கள் மீது தாக்கல் செய்துள்ளனர் என்றால், சரிதான். மேற்படி வழக்கை பூர்வீகமாக உள்ள வண்டிப்பாதையை தடுக்கக்கூடாது என பரிகாரம் கோரிதான் தாக்கல் செய்தனர் என்றால், சரிதான்.

9) மேற்படி வழக்கில் நாங்கள் எதிர்வாதம் செய்தோம். மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையர் சொத்துக்களை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் நகல்தான் மேற்படி வழக்கில் நீதிமன்ற ஆணையரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை மற்றும் வரைபடம் என்றால், எனக்கு படிக்கத் தெரியாது. மேற்படி வழக்கு தற்போதும் நிலுவையில்தான் உள்ளது என்றால், சரிதான்.

10) தற்போது நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் அ.வ.எண்.194/2013 என்ற வழக்கை பற்றி நாங்கள் வழக்குரையிலோ, என் முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால், சொல்லவில்லை.

11) இவ்வழக்கில் பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரையில் அ.வ.எண்.194/2013 என்ற வழக்கு பற்றியும் அதில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தை பற்றியும், அதற்கு எங்கள் தரப்பில் மறுப்பு தெரிவிக்கவில்லை என்பது குறித்தும், பிரதிவாதிகள் சொல்லியுள்ளார்கள் என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது.

12) பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையை படித்துப்பார்த்து அதற்கு பின்புதான் என்னால் முதல் விசாரணை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான்.

13) இவ்வழக்கை நாங்கள் காவேரி (எ) மந்தியின் வாரிசுகள் என்ற அடிப்படையில்தான் தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான். என் வழக்குரையுடன் வம்சாவழியை காண்பிப்பதற்காக எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால், சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு நான் சொல்வதுபோல் எந்த ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், சரியல்ல.

14) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.16 வரையிலான ஆவணங்களில் என்ன கண்டுள்ளது என என்னால் கூற முடியுமா என்றால், எனக்கு படிக்கத் தெரியாது, அதனால் கூற முடியாது.

15) காவேரி (எ) மந்தி எப்போது இறந்தார் என்றால், எனக்கு சரியாக தெரியாது. என் வழக்குரையில் காவேரி (எ) மந்தி எப்போது இறந்தார் என சொல்லியுள்ளேன் என எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

16) காவேரி (எ) மந்தி இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு 38 ஆண்டுகளுக்கு முன்பு

இறந்துவிட்டார் என்றால், சரிதான். என் வழக்குரையில் 30 ஆண்டுகளுக்கு முன்பு காவேரி (எ) மந்தி என்பவர் இறந்ததாக சொல்லியுள்ளது தவறானது என்றால், சரியல்ல.

17) காவேரி (எ) மந்தி என்று என் வழக்கில் நான் சொல்லியுள்ளது தவறானது என்றும், உண்மையில் அவரது பெயர் மந்தி (எ) காவேரி என்றால், சரியல்ல. மேற்படி காவேரி (எ) மந்தி உயிருடன் இருந்த காலத்திலேயே அவரது சொத்துக்களை அவரது மகன்களுக்கு பிரித்து கொடுத்துவிட்டார் என்றால், சரிதான்.

18) அவ்வாறு பாகம் பிரித்ததில் அவரது மகன் அம்மாசிக்கு ச.எண்.248/1B ல் 74 செண்டுகள் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றால், சரிதான். ச.எண்.248/2 ல் எவ்வளவு நிலம் இருந்தது என்றால், அதுகுறித்து எனக்கு தெரியாது, ஆனால் அதில் எங்களுக்கு சொந்தமான தடம் உள்ளது.

19) மேற்படி தடம் சிந்தாமணியூர் மெயின்ரோட்டில் இருந்து வருகிறது என்றால், சரிதான். மேற்படி தடத்தை காவேரி (எ) மந்தியின் 3 மகன்களும் விலைக்கு வாங்கவில்லை என்றாலும், 1955 ம் வருட கிரய பத்திரத்தின் மூலம் மேற்படி காவேரி (எ) மந்தி வாங்கிய சொத்துதான் என்றால், சரிதான்.

(1 முதல் 6, 10 முதல் 17 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).

ஒம்/−திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.